<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | திருமூர்த்தி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.07.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் காந்திபுரத்தில் வசித்து வருகிறேன். எலக்டீரிசியன் வேலை செய்து வருகிறேன். கடந்த 17.05.2022 ம் தேதியன்று ஆலம்பாளையத்தில் ராமசாமி வீட்டிற்கு எலக்டீரிசியன் வேலைக்கு சென்று வேலை முடிந்து விட்டு சிவாநகரில் ராமசாமி வீட்டின் முன்பு நின்றிருந்தேன். சாட்சி மீண்டும் தேதியை 15.07.2022 என்று கூறிகிறார். நானும் மாரிமுத்து சாமி ஆகேய்ார் எலக்டிரிக்கல் வேலை சம்பவந்தமாக பேசி கொண்டிருந்தோம். அப்போது ஆலம்பாளையம் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சூபபர் மேக்ஸ கேஸ் வண்டி கண்ட்ரோல் இல்லாமல் உலட்டி கொண்டும் தடுமாறி கொண்டும் வேகமாக வந்தது. அப்போது என் அக்கா மகள் கீதா யூனியன் ஆபிஸ்க்கு செல்வதற்காக Hero Duet வண்டியில் வந்தவர் எங்களிடம் பேசி கொண்டு வண்டியை ஓரமாக போட்டு நிறுத்தி விட்டு பின்னர் சென்ற போது கேஸ் வாகனம் அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு விட்டது. கீதாவிற்கு அடித்து மேலே தூக்கி வீசியதில் மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் நாங்கள் மூவரும் சென்று பார்த்த போது கீதா செயலிழந்து இருந்தாள். உடனடியாக

ஆம்புலன்ஸ்ல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அந்த சமயம் கேஸ் வண்டி ஓட்டுநர் ஆஜர் எதிரி மதன்குமார் தேவிடியா மகனே என்று தகாத வார்த்தையில் திட்டி லிவரை எடுத்து வந்து விபத்து சம்பந்தமாக எங்கியாவது போய் சொன்னால் கொலை செய்து விடுவேன் என்ற மிரட்டினார். பின்னர் கூட்டம் சேர்ந்த உடன் மதன் குமார் ஓடி விட்டார். பின்னர் கீதாவின் கணவருக்கு தகவல் கூறினேன். உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று கீதாவின் பிரேதத்தை சவக்கிடங்கில் வைத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கைப்பட எழுதியது தான். அந்த புகார் **அ.சா.ஆ. 1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எங்களை மிரட்டி விபத்து ஏற்படுத்திய மதன் குமார் இப்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். பின்னர் அன்று மாலை பிரேத விசாரணை முடித்து கீதாவின் உடலை பெற்று எங்கள் வழக்கப்படி நல்லடக்கம் செய்தோம். ஆய்வாளர் இது சம்பந்தமாக விசாரித்தார். கேஸ் வண்டியின் எண் TN 78 T 6005 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : மாரிமுத்து | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சிவராஜ் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.07.2024

**முதல் விசாரணை**

நான் RG புதுாரில் வசித்து வருகிறேன். டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 15.07.2022 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நான கடைக்கு சென்றிருந்தேன். ஆலம்பாளையம் சிவா நகர் வந்த போது எனக்கு தெரிந்த சாமி மற்றும் சிவக்குமார் ஆகியோர் நின்று பேசி கொண்டிருந்தனர். நானும் அவர்களுடன் பேசி கொண்டிருந்த போது சிவக்குமாரின் அக்கா மகள் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி Scooty வாகனத்தில் சிவக்குமாரின் அக்கா மகள் கீதா என்பவர் எங்கள் அருகில் ஓரமாக வந்த போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த சூப்பர் மேக்ஸிமோ மகேந்திரா கேஸ் வாகனம் ஓவர் ஸ்பீடாக உலட்டி கொண்டும் வந்து கீதா ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார். அப்போது கீதாவிற்கு மண்டையில் இரத்தகாயம் ஏற்பட்டு அடிப்பட்டி கிடந்தார். இரத்தம் அதிகமாக போய்விட்டது. ஆம்புலன்ஸ் வரவழைத்தோம். கேஸ் வண்டி ஓட்டுநர் கீழே இறங்க வந்து கெட்ட வார்த்யைால் திட்டினர். நான் பதட்டத்தில அடிப்பட்ட கீதாவிற்கு தண்ணீர் கொடுத்தும் அவர குடிக்கவில்லை. அதன் பிறகு அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இந்த விபத்திற்கு கேஷ் வண்டி டிரைவர் தான் காரணம். அதன் பின் அரசு மருத்துவமனைக்கு சென்று பிரேத விசாரணைக்கு பின்னர் உடலை பெற்று நல்லடக்கம் செய்தோம். ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.263 /2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.3<br>Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சாமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சந்திரன் | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.07.2024

**<u>முதல் விசாரணை</u>**

நான் குருவப்ப நாயக்கனூரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 15.07.2022 ம் தேதி நானும், சிவக்குமாரும், மாரிமுத்துவும் ஆலம்பாளையம் சிவா நகரில் நின்று பேசி கொண்டிருந்த போது சிவக்குமாரின் தங்கை ராஜேஷ்வரனின் மனைவி கீதா குருவப்ப நாயக்கனூரில் இருந்து டிவிஎஸ் எக்ஸல் வாகனத்தில் வந்த போது மக்கள நல பணியாளர் பணி சம்பந்தமாக வந்து கொணடிருந்த போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தாறுமாறாகவும் வேகமாகவும் வந்த TN 78 T 6005 Mahendra super max கேஸ் வாகனம் கீதாவின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. பின்னர் கீதாவை சென்று பார்த்த போதுஅவர் தலையில் பலத்த அடி பட்டிருந்தது. பின்னர் ஆம்புலன்ஸ் வரவழைத்தோம். பினனர் கேஸ் வண்டியின் ஓட்டுநர் கண்டாரயோழி மகனே என்று தகாத வார்த்தையால் எங்களை பார்த்து திட்டினார் அவர் வண்டியில் இருச்நத லிவரை எடுத்து இது பற்றி வெளியில் சொன்னால் கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டினார். உடுமலை அரசு மருத்துவமனைக்கு கீதாவை அனுமதித்தோம். மருத்துவர் இறந்துவிட்டதாக கூறினார்.

கீதாவின் கணவருக்கு தகவல் கொடுத்தோம் இது சம்பந்தமாக சிவக்குமார் காவல் நிலையத்திறகு சென்று புகார் கொடுத்தார் அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணைக்கு பின்னர் கீதாவின் உடலை பெற்று நல்லடக்கம் செய்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள். எங்களை திட்டியவர் நீதிமன்றத்தில் உள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 263/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.4<br>Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ்வரன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : முருகன் | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.07.2024

**முதல் விசாரணை**

நான் குருவப்ப நாய்க்கனூரில் வசித்து வருகிறேன். கோழிப்பண்ணையில் கோழிகளுக்கு மருந்து செலுத்தும் வேலை செய்து வருகிறேன். என் மனைவி பெயர் கீதா. அவர் தேசிய வேலை வாய்ப்பு திட்டத்தில் ஒருங்கிணைப்பாளராக பணி புரிந்து வந்தார். எங்களுக்கு ஒரே மகள் பெயர் மித்ரா. 6 வயதாகிறது. கடந்த 15.07.2022 ம் தேதி மதியம் 1.30 மணியளவில் நான் கோழி பண்ணையில் பணியில இருந்த போது சிவக்குமார் அண்ணன் என்து போன் மூலம் தகவல் சொன்னார். கீதாவிற்கு சிவா நகரில் அருகில் கேஸ் வண்டி மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் தற்போது அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளோம் என்று கூறினார்.மேலும் டிரைவர் திட்டியதாகவும் கூறினார் நான அரசு மருத்துவனைக்கு வந்த பார்த்த போது என் மனைவி இறந்து விடடடதாக

மருத்துவர் கூறினார். இது சம்பந்தமாக சிவக்குமார் காவல் நிலைய் சென்று புாகர் கொடுத்தார. பிரேத விசாரணைக்கு பின்னர் கீதாவின் உடலை பெற்று நல்லடக்கம் செய்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.